


# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa

www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# சட்டப்பேரவையில் கருணாநிதியின் உருவப் படம்:குடியரசுத் தலைவர் திறந்துவைத்தார்

## முதலமைச்சராக மகிழ்கிறேன், மகனாக நெகிழ்கிறேன்:முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்







மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் முழு திருவுருவப் படத்தைத் தமிழக சட்டப்பேரவையில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்துவைத்தார். சென்னை மாகாணமாக இருந்தபோது மக்களால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவை1921 ம் ஆண்டு ஜனவரி 12 ம் தேதி உருவாக்கப்பட்டது. அதன்படி, சென்னை மாகாண சட்டப்பேரவை உருவாக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், பேரவை நூற்றாண்டு விழா ஆக 02 கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, தமிழகத்தின் முதல்வராக 5 முறை பணியாற்றியவரும் 13 முறை சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தவருமான கருணாநிதியின் உருவப் படத்தைச் சட்டப்பேரவையில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்துவைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், இவ்விழாவில் பங்கேற்க டெல்லியிலிருந்து தனி விமானம் மூலம் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் சென்னை விமான நிலையம் வந்தடைந்தார். அவரை முதல்வர் மு.க.ஸ்டாலின் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.மேலும்,சில புத்தகங்களையும் அன்பளிப்பாக வழங்கினார். பின்னர், கார் மூலம் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஆளுநர் மாளிகை புறப்பட்டார். அவரது வருகையையொட்டி, சாலையின் இரு புறங்களிலும் வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆளுநர் மாளிகையில் மதிய உணவருந்திய குடியரசுத் தலைவர், மாலை 4.40 மணியளவில் புறப்பட்டு 5.00 மணியளவில் சட்டப்பேரவையை வந்தடைந்தார்.முன்னதாக, விழா மேடையில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர் மு.க.ஸ்டாலின், சபாநாயகர் மு.அப்பாவு, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி ஆகியோர் அமர்ந்திருந்தனர். மேலும்.இவ்விழாவில், அமைச்சர்கள், தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி, அரசு கொறடா, கனிமொழி, ஜோதிமணி, தமிழச்சி தங்கபாண்டியன் உள்ளிட்ட மக்களவை மாநிலங்களவை உறுப்பினர்கள், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, விசிக தலைவர் தொல்.திருமாவளவன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட தலைவர்கள் கலந்துகொண்டனர். விழா மேடைக்கு குடியரசுத் தலைவர் வந்தவுடன் தேசிய கீதமும், அதனைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தும் இசைக்கப்பட்டன.

பின்னர், சபாநாயகர் அப்பாவு, குடியரசுத் தலைவர் உள்ளிட்ட அனைவரையும் வரவேற்றார். அப்போது, தென் மாநிலங்களின் தாய் சட்டப்பேரவையாக தமிழக சட்டப்பேரவை திகழ்வதாகக் கூறிய சபாநாயகர், கோட்டையில் மாநில முதல்வர்கள் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத்தந்தது, பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு, அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு, பெண்களுக்குச் சொத்துரிமை உள்ளிட்ட கருணாநிதியின் சாதனைகளைப் பட்டியலிட்டார். மேலும், முதல்வர் மு. க . ஸ்டாலின் குறித்தும் புகழ்ந்து பேசினார். கருணாநிதியின் உருவப்படத்தை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறப்பது மிகப் பொருத்தமானது எனவும் அவர் தெரிவித்தார். இதன்பின், குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநருக்கு முதல்வர் ஸ்டாலின் பொன்னாடை, புத்தகம், நினைவுப் பரிசு ஆகியவற்றை வழங்கினார் . அதேபோன்று, முதல்வருக்கு சபாநாயகர் பொன்னாடை, புத்தகம், நினைவுப் பரிசை வழங்கினார். இதையடுத்து, கருணாநிதியின் முழு உருவப் படத்தைக் குடியரசுத் தலைவர் திறந்துவைத்தார். அதில், யானை சிலை மீது கருணாநிதி கை வைத்திருப்பது போன்ற உருவப் படம் இடம்பெற்றுள்ளது. அதன் பின்னால், திருவள்ளுவர் சிலையும் இடம்பெற்றுள்ளது. தமிழக சட்டப்பேரவையில் உருவப்படம் திறக்கப்படும் 16 வது தலைவர் கருணாநிதி என்பது குறிப்பிடத்தக்கது.

# டோக்யோ ஒலிம்பிக்:வெண்கலப் பதக்கம் வென்றார் இந்தியாவின் பி.வி.சிந்து




ஜப்பானின் டோக்கியோ நகரில் 12 வது ஒலிம்பிக் டிகள் நடந்து வருகின்றன. இதில் மகளிருக்கான பாட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் வெண்கல பதக்கத்துக்கான ஆட்டம் நடந்தது இதில் உலகத் தரவரிசையில் 6 வது இடத்தில் உள்ள இந்தியாவின் பி.வி.சிந்து, 9 வது இடத்தில் உள்ள சீனாவின் ஹி பிங் ஜியாவோவை எதிர்த்து விளையாடினார். 23 நிமிடங்கள் நடந்த முதல் செட்டை சிந்து 21 13 என கைப்பற்றினார். 2 வது செட்டில் பிங் ஜியாவோ சற்று சவால் கொடுத்தார். எனினும், சிந்து சிறப்பாக ஆடி, இந்த செட்டை 21 13 என கைப்பற்றினார். மொத்தம் 53 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் சிந்து 21 13,21 15 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கம் வென்றார். இதன்மூலம் ஒலிம்பிக்கில் இந்தியா சார்பில் 2 வது முறையாகபதக்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார் பி.வி.சிந்து, இவர், கடந்த 2016 ம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றியிருந்தார். ஒலிம்பிக்கில் தனிநபர்பிரிவில் 2 முறை பதக்கம் வென்ற2—2 வது இந்தியர் என்ற பெருமையையும் சிந்து பெற்றுள்ளார். இதற்குமுன்பு மல்யுத்தத்தில் சுஷில் குமார் இருமுறை பதக்கம் கைப்பற்றியிருந்தார். அவர், கடந்த 2008 ம் ஆண்டுபெய்ஜிங் ஒலிம்பிக்கிலும் 2012 —ம்ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கிலும் வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார். டோக்கியோ ஒலிம்பிக்கில் பி.வி.சிந்து கைப்பற்றியுள்ளது இந்தியாவின் 2 வது பதக்கமாகும். ஏற்கெனவே பளுதூக்குதலில் மீராபாய் சானு வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார். குத்துச்சண்டையில் லோவ்லினா போர்கோஹெய்ன் அரை இறுதிச் சுற்றுக்குமுன்னேறி குறைந்தபட்சம் வெண்கலப் பதக்கம் கைப்பற்றுவதை உறுதிப்படுத்தியிருந்தார். இந்நிலையில், பி.வி.சிந்து வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். கடந்த 5 ஆண்டுகளில் காமன்வெல்த் விளையாட்டு, ஆசிய விளையாட்டு, பிடபிள்யூஎஃப் உலக டூர் பைனல்ஸ் ஆகிய பெரிய போட்டித் தொடர்களில் பங்கேற்ற பி.வி.சிந்து, பதக்கம் வென்றே நாடு திரும்பியுள்ளார். அந்த வரிசையில் தற்போது ஒலிம்பிக்கிலும் பதக்கம் வென்றுள்ளார். நடந்த அரை இறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்த போதிலும் மனச்சோர்வு அடையாமல் உறுதியுடன் விளையாடி பதக்கம் வென்றுநாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார். வெண்கலப் பதக்கம் வென்றுள்ள பி. வி. சிந்துவுக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன

# மீண்டும் ஊரடங்கிற்கு நிர்பந்தித்து விடாதீர்கள் — முதல்வர் மு.க.ஸ்டாலின்!




தமிழகத்தில் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு வரும் ஆகஸ்ட் 9 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டு இருக்கும் நிலையில் 68 நாட்களுக்கு பிறகு நேற்று வரை மூன்றாவது நாளாக கரோனா பாதிப்பு சற்று அதிகரித்தது. இரண்டாயிரத்தை நெருங்கும் அளவிற்கு கரோனா ஒருநாள் பாதிப்புபாதிப்பு அதிகரித்துள்ள நிலையில், தொற்று பாதிப்பு எண்ணிக்கையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. அதன்படி சென்னையில் 9 இடங்களில் வணிக வளாகங்கள், அங்காடிகள் செயல்பட தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கரோனா தடுப்பு நடவடிக்கை தொடர்பாக வீடியோ வெளியிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், மீண்டும் ஊரடங்கு சூழலுக்கு அரசை நிர்பந்தித்து விடாதீர்கள் என கடுமையாக கேட்டுக்கொள்கிறேன், என பேசியுள்ளார். கூட்டம் கூடுவதால் கரோனா பரவ மக்களே காரணமாகி விடக்கூடாது. மீண்டும் ஊரடங்கு சூழலுக்கு அரசை நிர்பந்தித்து விடாதீர்கள். கரோனா என்ற பெரும் தொற்று கடந்த பதினெட்டு மாத காலமாக நாட்டையும் நாட்டு மக்களையும் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், அரசு ஏற்படுத்தியுள்ள மருத்துவ கட்டமைப்புகள், ஊரடங்கு கட்டுப்பாடுகள், நம்முடைய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடைய தன்னலம் கருதாத சேவை ஆகியவற்றின் காரணமாக கரோனா இரண்டாம் அலையை கட்டுப்படுத்தி இருக்கிறோம். கட்டுப்படுத்தி இருக்கிறோமே தவிர முழுமையாக முற்றுப்புள்ளி வைக்கவில்லை. கரோனா என்பது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவும் தொற்று நோயாக இருப்பதால் முழுமையாக முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை. முழுமையாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதாக கருதப்படும் நாடுகளில்கூட மீண்டும் பரவத் தொடங்கியிருக்கிறது. கேரளா, கர்நாடகா போன்ற நமது அண்டை மாநிலங்களில் மீண்டும் கரோனா பரவல் அதிகமாகி வருகிறது. மக்கள் தொகை அதிகமாகவும், நெரிசலாக உள்ள சூழல் உள்ள நாட்டில் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதில் பல்வேறு சிரமங்கள் இருந்தாலும் மக்களை காக்கின்ற பெரும் பொறுப்பு அரசின் கையில் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து அதற்கேற்ப பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். இதை கருத்தில் கொண்டு மக்கள் செயல்பட வேண்டும் என்று மன்றாடி கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்.

## கேரளாவிலிருந்து தமிழகம் வருபவர்களுக்கு RT-PCR

# நெகடிவ் சான்றிதழ் கட்டாயம்





வரும் 5 ம் தேதி முதல் கேரளாவிலிருந்து தமிழகம் வருபவர்களுக்கு RT-PCR நெகடிவ் சான்றிதழ் கட்டாயம் என தெரிவித்துள்ள சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன்இ சென்னை விமான நிலையத்தில் 13 நிமிடங்களில் பரிசோதனை முடிவை அறிவிப்பதற்கான முயற்சி ஓரிரு நாளில் நடைமுறைக்கு வர வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளார்.

## காவலர்களுக்கு வார விடுப்பு கண்டிப்பாக வழங்க வேண்டும்

# டி.ஜி.பி.சைலேந்திர பாபு




தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு வாரம் ஒருநாள் கட்டாயமாக விடுப்பு வழங்க வேண்டும் என உத்தரவிட்டு காவல்துறை தலைமை இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவலர்கள் தங்கள் உடல் நலனை பேணி பாதுகாக்க ஏதுவாகவும், தங்களது குடும்பத்தினருடன் போதிய நேரம் செலவிடவும் வாரத்தில் ஒருநாள் வாராந்திர ஓய்வு கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் வார ஓய்வு தேவைப்படவில்லை என தெரிவிக்கும் காவலர்களுக்கும், ஓய்வு தினத்தன்று பணியில் இருக்கும் காவலர்களுக்கும் மிகைநேர ஊதியம் வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். காவலர்களின் பிறந்தநாள் மற்றும் திருமண நாட்களில் அவர்களது குடும்பத்தாருடன் கொண்டாட ஏதுவாக அந்தந்த நாட்களில் அவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும், தமிழக காவல்துறையின் சார்பாக பிறந்தநாள் மற்றும் திருமணநாள் வாழ்த்துச் செய்தி, மாவட்டஃமாநகர காவல் கட்டுப்பாட்டு அறையின் வானொலி மூலமாக சம்பந்தப்பட்ட காவலர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் டி. ஜி. பி . சைலேந்திர பாபு ஐபிஎஸ் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த அறிவுரையை அனைத்து மாநகர காவல் ஆணையர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

## மூன்றாம் பாலினத்தவருக்கு மூன்று மாதங்களில் தடுப்பூசி

# நீதிமன்றத்தின் உத்தரவு..!



மூன்றாம் பாலினத்தவர் அனைவருக்கும் மூன்று மாதங்களில் கரோனா தடுப்பூசி செலுத்தப்படுவதை உறுதி செய்யும்படி தமிழ்நாடு அரசிற்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கரோனா நிவாரண நிதியாக குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தையும், கரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டத்தையும், ரேஷன் அட்டைகளோ, அடையாள அட்டைகளோ இல்லாத மூன்றாம் பாலினத்தவர்களுக்கும் வழங்க தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிடக்கோரி மூன்றாம் பாலினத்தவரான கிரேஸ் பானு வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில் ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கும் நிவாரணம் வழங்கவும், தடுப்பூசி முகாம் நடத்தவும் தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டிருந்தது. அந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி, நீதிபதி ஆதிகேசவலு அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர் ஆர். சண்முகசுந்தரம் ஆஜராகி, மூன்றாம் பாலினத்தவருக்கு கரோனா நிவாரண நிதியில் முதல் தவணை 2000 ரூபாயை வழங்கிவிட்டதாகவும், இரண்டாம் தவணையும் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.அதனை ஏற்ற நீதிபதிகள் மூன்றாம் பாலினத்தவருக்கு இரண்டாம் தவணை வழங்கப்படும் என அரசு உறுதி அளித்துள்ளதாகக் குறிப்பிட்டு அவர்களுக்கு மூன்று மாதங்களில் தடுப்பூசி செலுத்துவதை உறுதிசெய்ய அரசிற்கு உத்தரவிட்டுஇ கிரேஸ்பானு தொடர்ந்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

## சுதந்திர தினத்தன்று கிராம சபைக் கூட்டங்களை நடத்த வேண்டும் - கோவை ஆட்சியரிடம் கமல் வலியுறுத்தல்



வரும் ஆகஸ்ட் 15 ம் தேதி, சுதந்திர தினத்தன்று கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என, மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் வலியுறுத்தியுள்ளார்.மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஆக 1 கோவை வந்தார். அவிநாசி சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் தங்கியுள்ளார். இன்றும், நாளையும் கட்சியினர் உள்ளிட்டோரைச் சந்திப்பதுடன் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இந்நிலையில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, கோவை மாவட்ட ஆட்சியர் ஜி.எஸ்.சமீரனிடம் ஆக2 காலை மனு ஒன்றை அளித்தார்.தொடர்ந்து செய்தியாளர்களிடம் கமல் கூறும்போது, கிராம சபைக் கூட்டங்களை நடத்தக் கோரி மனு அளித்துள்ளோம். கடந்த 2020 ஜனவரிக்குப் பின்பு கிராம சபைக் கூட்டம் நடக்கவே இல்லை என்பதுதான் எங்கள் குறை, அதை மாவட்ட ஆட்சியரிடம் மனு மூலம் தெரிவித்துள்ளோம். வரும் ஆகஸ்ட் 15 ம் தேதி, சுதந்திர தினத்தன்று கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறும் என எதிர்பார்க்கின்றோம். தமிழக நிதிநிலை அறிக்கையில் கிராம சபைகளுக்கு எனத் தனி நிதி ஒதுக்கீடு குறித்து அறிவிக்க வேண்டும், என்றார்.அப்போது கட்சியின் மாநில மாவட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திமுக அரசுக்கு எதிராக அதிமுக போராட்டம்.!



திமுக ஆட்சிக்கு வந்தபின் முதன்முறையாக அரசுக்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் அதிமுகவினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். திமுக அரசு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனக் கூறி அதிமுகவினர் பல்வேறு இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்தில் நீட் தேர்வு ரத்து, பெட்ரோல் —டீசல் விலை குறைப்பு உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், தமிழ்நாடு சட்டப்பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சி துணைத் தலைவரும்இ அதிமுகவின் ஒருங்கிணைப்பாளருமான ஓ. பன்னீர்செல்வம்; சேலம் மாவட்டம்இ சூரமங்கலத்தில் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், தமிழ்நாடு சட்டப்பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுகவின் இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி; கோபிச்செட்டிப்பாளையத்தில் முன்னாள் அமைச்சர் கே. ஏ. செங்கோட்டையன்; திண்டிவனத்தில் முன்னாள் அமைச்சர் சி. வி. சண்முகம்; கோவில்பட்டியில் முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு; சென்னை கே. கே. நகரில் முன்னாள் அமைச்சர் வளர்மதி உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## இது அதிமுகவின் சமூகநீதிக்கு கிடைத்த வெற்றி:ஓபிஎஸ்



அகில இந்திய இட ஒதுக்கீடு, 1986 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் பிறப்பித்தத் தீர்ப்பின்படி அமலுக்கு கொண்டுவரப்பட்டது. அது நடைமுறையில் இருந்த நிலையில்தான், இந்த அகில இந்திய ஒதுக்கீட்டில் ஓபிசி பிரிவினருக்கான இடஒதுக்கீடு ஏன் அமல்படுத்தப்படவில்லை என்ற கேள்விகள் எழுந்த வண்ணம் இருந்தன. அதற்காக நீதிமன்றங்களிலும் வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன, அதன் தொடர்ச்சியாக, 2021 2022 கல்வியாண்டில் மருத்துவப் படிப்புகளில் ஓபிசி பிரிவினருக்கு 27% இடஒதுக்கீடு வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மருத்துவப் படிப்பில் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் ஓபிசி பிரிவினருக்கு நடப்பு ஆண்டிலேயே இடஒதுக்கீடு வழங்கப்படும். பொருளாதார ரீதியாக பின்தங்கிய முற்பட்ட வகுப்பினருக்கு 10% இடஒதுக்கீடு வழங்க மத்திய அரசு முடிவுசெய்துள்ளது. எம்.பி.பி.எஸ், எம்.டி, எம். எஸ். , டிப்ளோமோ, பிடிஎஸ், எம்டிஎஸ் படிப்புகளில் நடப்பு கல்வியாண்டு முதல் இடஒதுக்கீடு அமல்படுத்தப்படுகிறது. மத்திய அரசின் உத்தரவால் ஓபிசி பிரிவினருக்கு 1500 இடங்களும், ஈ. டபிள்யூ. எஸ் பிரிவினருக்கு 550 இடங்களும் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இந்த இடஒதுக்கீடு அதிமுகவிற்கு கிடைத்த மற்றொரு மைல்கல் என அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் தெரிவித்துள்ளார்.ஓபிசி பிரிவினருக்கு 27% இடஒதுக்கீடு அதிமுகவின் சட்ட போராட்டத்திற்கு கிடைத்த மற்றொரு மைல்கல்27% மூ இடஒதுக்கீட்டை உறுதியாக நின்று அமல்படுத்திய பிரதமருக்கு தமிழ் மக்கள் சார்பில் நன்றி, இதர பிற்படுத்தப்பட்டோருக்கு சதவிகித 50 இடஒதுக்கீடு என்ற இலக்கை தொட தொடர்ந்து அதிமுக முயற்சி எடுக்கும். இந்த இடஒதுக்கீடு அறிவிப்பு அதிமுக தொடர்ந்து பின்பற்றி வரும் சமூகநீதிக்கு கிடைத்த வெற்றி என ஓபிஎஸ் தெரிவித்துள்ளார்.

அகர முதல கவிதைக்களம்
250-க்கும் மேற்பட்ட கவிஞர்கள், தினம் 70-க்கும் மேற்பட்ட படைப்புகள், வாரம் 20-ம், மாதம் 50க்கும் மேற்பட்ட புத்தகப்பரிசுகளும், சான்றிதழ்களும்,
என்றும் தமிழ்ப்பணியில்: அகரமுதல இலக்கிய பேரவை மற்றும் சிவம் அறக்கட்டளை-முகையூர். தொடர்புக்கு: 9597887847





# அகர முதல

Aagaramuthalaa | மின்னிதழ் | www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், ஆகஸ்ட் 03.2021 | மயிலாடுதுறை | மலர்:08 இதழ்:05

# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறை மாவட்ட இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் கடனுதவி

### மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதா தகவல்

மயிலாடுதுறை மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தில் வழங்கப்படும் கடனுதவியை பயன்படுத்திக் கொள்ள தொழில்முனைவோருக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு, மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 முதல் 35 வயது வரையிலான பொதுப் பிரிவினரும், 18 முதல் 45 வயது வரையிலான சிறப்பு பிரிவினரும் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்படும் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி, சேவை மற்றும் வியாபார தொழில் செய்து பயன்பெறலாம். இத்திட்டத்தின் கீழ் வியாபாரம் மற்றும் சேவை தொழில்களுக்கு ரூ5 லட்சம் வரையிலும், உற்பத்தி தொழில்களுக்கு ரூ.15 லட்சம் வரையிலும், திட்ட மதிப்பீட்டில் 25 % (அதிகபட்சம் ரூ 2,50,000) அரசு மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவி வழங்கப்படும். இந்த திட்டத்தின்கீழ் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதிவரை வழங்கப்படும் கடன் திட்ட பயனாளிகளுக்கு தொழில் முனைவோர் பயிற்சியில் இருந்து தமிழக அரசால் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே பயன்பெற ஆர்வமுள்ள தொழில் முனைவோர் இணைய முகவரியில் விண்ணப்பித்து பயன்பெறலாம். மேலும் இது தொடர்பான விவரங்களுக்கு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் மாவட்ட தொழில் மையத்தில் உள்ள பொது மேலாளரை 89255 33969 என்ற செல்லிடப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும் என தெரிவித்துள்ளார்.

## கொரோனா விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு



மயிலாடுதுறையில் கரோனா தடுப்பு விழிப்புணர்வு வாரத்தையொட்டி, வர்த்தகர் சங்கம் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் ஞாயிற்றுக்கிழமை விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர். மயிலாடுதுறை பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா பங்கேற்று வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கரோனா விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கினர். தொடர்ந்து, மணிக்கூண்டு பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆட்சியர் முன்னிலையில், வர்த்தக சங்க நிர்வாகிகள், அனைத்து ரோட்டரி சங்க நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கரோனா தடுப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். பின்னர் மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா கூறியது. தமிழக அரசின் உத்தரவுப்படி ஆக 1 முதல் 7ஆம் தேதி வரை மயிலாடுதுறை மாவட்டத்தில் பல்வேறு கரோனா நோய்த் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.அதன்படி,துண்டுப் பிரசுரங்கள் விநியோகம், விழிப்புணர்வு சுவரொட்டிகள் தயார்செய்யும் போட்டி,ஓவியப்போட்டி,சிறந்த வாசகங்கள்,மீம்ஸ் தயார் செய்தல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. கரோனா 3 ஆவது அலை வராதவகையில் அனைவரும் தடுப்பு வழிமுறைகளான முகக் கவசம் அணிதல்,கைகளை அடிக்கடி கிருமிநாசினி கொண்டு சுத்தப்படுத்துதல்,சமூக இடைவெளியை பின்பற்றுதல் போன்றவைகளை கடைப்பிடித்து,அரசின் கரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார். நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை துணை இயக்குநர் பிரகாஷ்,மயிலாடுதுறை சேம்பர் ஆஃப் காமர்ஸ் தலைவர் சி.செந்தில்வேல்,ரோட்டரி சங்க துணை ஆளுநர் மு. ரா. பாஸ்கரன்,வர்த்தக சங்க நிர்வாகிகள் ஸ்ரீராம்கண்ணன், அக்பர் ஜெயக்குமார்உள்ளிட்டோர் பங்கேற்றனர்

## முகக் கவசம் அணிவதன் அவசியம் மியூரல் முறை ஓவியங்களால் விழிப்புணர்வு..!







முகக் கவசம் அணிவதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் பெண் முகக்கவசம் அணிந்த விழிப்புணர்வு படம் மற்றும் மயிலாடுதுறை நகரின் பெருமைகளை உணர்த்தும் படங்கள் ஆகியவற்றை "மியூரல்" முறை ஓவியங்களாக மாணவர்கள் வரைந்திருப்பது அனைவரையும் கவர்ந்துள்ளது. மயிலாடுதுறை ரோட்டரி சங்கம் சார்பில் சென்னை தரமணி எம்.ஜி.ஆர். திரைப்பட கல்லூரி இறுதியாண்டு மாணவர் பாரதிராஜா, கோவை வணிகவியல் கல்லூரி மாணவர் ஹரிஹரன், பெரம்பலூர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் பிரதீப் மற்றும் மோகன் ஆகியோர் இணைந்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனை வளாகத்திலுள்ள, கட்டட சுவர்களில் தத்ரூபமாக "மியூரல்" முறையிலான பெயிண்டிங் ஓவியத்தை வரைந்துள்ளது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. கொரோனா தொற்றுப் பரவாமல் இருக்க முகக்கவசம் அணிவதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் பெண் முகக்கவசம் அணிந்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஓவியத்தையும், மயிலாடுதுறையின் பாரம்பர்ய பெருமைகளை உணர்த்தும் வகையில் காவிரி துலாக்கட்ட மண்டபம், ரிஷபதீர்த்த காவேரி, நந்திகேஸ்வரர், மணிக்கூண்டு, ரயில், மாடு, வளமான வயல்வெளி, பள்ளிவாசல், சர்ச் ஆகிய ஓவியங்களையும் வரைந்துள்ளனர். மருத்துவமனை வாயிலிலுள்ள இரண்டு பக்க சுவர்களில் ஒருபுறம் மிகப்பெரிய கொரானா வைரஸ் ஒன்றை மருத்துவர்கள் தடுப்பூசி செலுத்தி அழிப்பதை போன்றும், மறுபுறம் மயிலுருவில் மயிலாடுதுறையில் வசிக்கும் மக்களை மருத்துவர்கள் காப்பது போலவும் ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். இந்த ஓவியங்கள் அனைவரின் கவனத்தையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. கல்லூரி மாணவர்களின் திறமையை வெளிப்படுத்திய இந்த ஓவியங்களைப் பொதுமக்கள் பார்த்துவிட்டு மாணவர்களைப் பாராட்டிச் செல்கின்றனர். மேலும் இந்த ஓவியங்கள் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வைரலாகி வருகிறது.

## தருமபுரம் ஆதீன கலைக்கல்லூரி பவள விழா. ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் பங்கேற்பு..!







மயிலாடுதுறையில் சைவ மடங்களில் ஒன்றான தருமபுரி ஆதீனம் உள்ளது. இந்த ஆதீனம் தமிழ் வளர்ச்சி மற்றும் கல்வி மற்றும் மருத்துவம் சார்ந்த பணிகளுக்காக உதவிகளை செய்து வருகிறது. சமுதாயத்திற்காக அனைத்து வகையிலும் உதவி புரிந்து வருகிறது. இந்த கல்லூரி தருமபுரி ஆதீனத்தால் கடந்த1946 ம் ஆண்டு 25 வது குருமகா சந்நிதானத்தால் செந்தமிழ்க் கல்லூரியாகத் தொடங்கப்பட்டது. 26 வது குருமணிகளால் 1988 ம் ஆண்டு முதல் கலைக்கல்லூரியாக வளர்ச்சி பெற்று தற்போது 27 வது கயிலை ஸ்ரீ நட்சத்திர குருமணிகளால் புரந்தருளப் பெறும் தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி தற்போது பவளவிழா ஆண்டில் அடியெடுதுது வைத்துள்ளது. இதனை கொண்டாடும் வகையில் தருமபுர ஆதீனம் கலைக்கல்லூரியின் பவளவிழா துவக்க விழா ஆதீன மடத்தில் நடைபெற்றது. இந்த விழாவுக்கு சிறப்பு அழைப்பாளராக தெலங்கானா ஆளுநரும், புதுச்சேரி மாநில துணை நிலை ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார். நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு ஆதீனம் சார்பில் பூரண கும்ப மரியாதை செய்யப்பட்டு மேளதாளத்துடன் வரவேற்பு கொடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து தருமபுர ஆதீனம் 27 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடம் ஆசி வாங்கினார். ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு ஆதினம் நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குத்தாலம் அருகே குளத்தில் பச்சிளம் குழந்தையின் உடல் வீச்சு.!



மயிலாடுதுறை அருகே பிறந்த ஆண் குழந்தையை குளத்தில் வீசிச்சென்ற கொடூரம் நிகழ்ந்துள்ளது. குழந்தையின் சடலத்தை கைப்பற்றி குத்தாலம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அருகே மல்லியம் ரயிலடி தெருவில் உள்ள குளத்தில் பிறந்த ஒருசில மணி நேரமான நிலையில், பச்சிளம் குழந்தையின் சடலம் கிடந்தது. இதைப்பார்த்த அப்பகுதி மக்கள் அளித்த தகவலின் பேரில் குத்தாலம் போலீசார் அந்த குழந்தையின் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் சென்றனர். அடையாளம் தெரியாத அந்த பச்சிளம் குழந்தையின் பெற்றோர் யார்? எதற்காக குளத்தில் வீசி சென்றார்கள்? எப்படி இறந்தது? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். பச்சிளம் குழந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



## மயிலாடுதுறை:குப்பைகளை உரமாக்கும் இயந்திரம், ஊராட்சியின் முயற்சிக்கு விவசாயிகள் வரவேற்பு.!



மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியம் ஆனைக்காரன்சத்திரம் ஊராட்சிக்கு உட்பட்ட தைகால் பகுதியில் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் திட்டம் துவங்கப்பட்டிருப்பது விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் லலிதா குப்பையிலிருந்து உரங்கள் தயாரிக்க ரூ.21 லட்சம் செலவில் வைக்கப்பட்டுள்ள இயந்திரங்களைப் நேரில் பார்வையிட்டு இத்திட்டம் சில தினங்களில் செயல்பட உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் தெரிவித்தார். அதன்பின் பேசிய கலெக்டர் லலிதா, மின்சாரத்தின் மூலம் இயங்கும் இந்த இயந்திரங்களுக்கு மின்சார வாரியம் மூலம் தனியாக ஒரு மின் மாற்றி அமைக்கப்பட்டு அதிலிருந்து இந்த இயந்திரத்திற்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.இந்த இயந்திரங்களை இயக்குவதன்மூலம் கொள்ளிடம் ஒன்றியத்தில் அனைத்து ஊராட்சிகளிலிருந்து பெறப்படும் மக்கும் குப்பைகள் அரைத்து மாவாக்கப்படும்.பின்னர் உரமாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.இதன் மூலம் குப்பைகளைக் கண்ட இடத்தில் கொட்டி சுகாதாரக் கேடு விளைவிக்காமல் இருக்க முடியும். இனி குப்பைகளைக் கண்ட இடங்களில் கொட்ட வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு ஊராட்சியிலிருந்தும் சேமிக்கப்படும் குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு, மக்காத குப்பைகளை மறுசுழற்சி பயன்பாட்டுக்கு அனுப்பப்படும். மக்கும் குப்பைகள் மட்டும் சேகரிக்கப்பட்டு, இந்த இயந்திரத்தின் மூலம் மாவாக அரைக்கப்பட்டு விவசாயிகள் வயலில் பயிருக்கு இடும் அளவுக்கு சத்துள்ள உரமாக தயார் செய்யப்பட்டுஇ தேவைப்படும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட இருக்கிறது, என்று தெரிவித்தார். குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் இயந்திரம் ஆனைக்காரன்சத்திரம் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ளதை அப்பகுதி மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

## செம்பனார்கோவிலில் நுன் கதிர்வீச்சு கருவி மூலம் காச நோய் கண்டறியும் முகாம்



செம்பனார்கோவிலில் நுன் கதிர்வீச்சு கருவி மூலம் காச நோய் கண்டறியும் முகாம் பூம்புகார் எம்எல்ஏ நிவேதா முருகன் தொடங்கி வைத்தார். மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 57 ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் உள்ளது. இந்த ஊராட்சிகளில்இ பேரூராட்சியில் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நுன் கதிர் இயந்திரம் மூலம் காச நோய் கண்டறியும் முகாமை பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா முருகன் தொடங்கி வைத்தார்.2025 ஆம் ஆண்டுக்குள் காச நோய் இல்லா தமிழகம் என்ற திட்டத்தின் கீழ் 2025 ஆண்டுக்கு முன் காசநோய் இல்லாத தமிழகத்தை கொண்டுவரும் நோக்கத்தில் செயல்படுத்தப்படுகிறது. இதில் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் 200பேர் முகாமில் கலந்துக்கொண்டு பயன்பெற்றனர். இதில் ஆக்கூர் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் வெங்கடேசன், முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் சக்திவேலன், விஷ்னுபிரியன், முதுநிலை ஆய்வக மேற்பார்வையாளர் வெங்கட்ராமன், நுன்கதிர் வீச்சாளர் ரஞ்சிதா உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

## சீர்காழி: பன்றிகளை பிடித்த வாலிபருக்கு கத்திக்குத்து, தந்தை,மகன் உள்பட3 பேர் கைது..!





மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர் பகுதியில் தென்பாதிஇ ஈசானிய தெருஇ இரணியன் நகர்இ பங்களாகுளத்து மேட்டு தெருஇ திட்டை ரோடுஇ கீழ தென்பாதி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தினமும் பன்றிகள் பொதுமக்களுக்கு தொல்லை கொடுத்து வந்தது. இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட பொதுமக்கள் சீர்காழி நகராட்சி ஆணையர் தமிழ்செல்வியிடம் சீர்காழி நகர் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறாக சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர். இது தொடர்பான செய்தி !சீர்காழி நகராட்சி சார்பில் நகர் பகுதியில் சுற்றி திரியும் பன்றிகளை பிடிப்பதற்கு மயிலாடுதுறையில் இருந்து ஆட்களை கொண்டுவந்து சீர்காழி நகர் பகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் சுற்றித்திரிந்த 20 க்கும் மேற்பட்ட பன்றிகளை பிடித்து வாகனத்தில் ஏற்றி கொண்டிருந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த பன்றி வளர்ப்பவர்கள் பன்றி பிடிக்க வந்த ஆட்களையும்இ வாகனங்களையும் முற்றுகையிட்டு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் பன்றிகளை விட்டால்தான் ஆட்கள் மற்றும் வாகனங்களை விடுவதாக கூறி தகராறில் ஈடுபட்டு வந்தனர். இதுதொடர்பாக நகராட்சி அலுவலர்கள் மற்றும் சீர்காழி போலீசார் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதனை பொருட்படுத்தாத பன்றி வளர்ப்பவர்கள் பன்றி பிடிக்க வந்த ஆட்களை தாக்கி வாகனத்தின் கண்ணாடியை உடைத்து ரகளையில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து சீர்காழி போலீசார் இருதரப்பினரையும் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். அப்போது எதிர்பாராமல் போலீஸ் நிலையம் முன்பு இரு தரப்பினரும் ஒருவரையொருவர் கல் மற்றும் மர கட்டைகளால் தாக்கி கொண்டனர். அப்போது பன்றி வளர்ப்பவர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் பன்றியை பிடிக்க வந்த மயிலாடுதுறையை சேர்ந்த சங்கிலி கருப்பன் வயது31 என்பவரின் வயிற்றில் குத்தினார். இதில் படுகாயம் அடைந்த சங்கிலி கருப்பன் சிகிச்சைக்காக சீர்காழி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதையடுத்து இரு தரப்பினரும் போலீஸ் நிலையம் முன்பு மீண்டும் தகராறில் ஈடுபட்டனர். இதுபற்றி தகவல் அறிந்த கூடுதல் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து இருதரப்பினரையும் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டனர். இந்த சம்பவம் குறித்து சீர்காழி போலீசார் வழக்குப்பதிவு செய்து சீர்காழி கீழ மாரியம்மன் கோவில் தெருவை சர்ந்த மாரிமுத்து 42 இவருடைய மகன் கார்த்திக் 20 அதே பகுதியை சேர்ந்த அய்யப்பன் 45 ஆகிய 3 பேரை கைது செய்தனர். இந்த சம்பவத்தால் 15 நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## நாகை மீனவர்கள் மீது நடுக்கடலில் துப்பாக்கிச்சூடு



நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து கடந்த 28 ம் தேதி அக்கரைப் பேட்டையைச் சேர்ந்த கௌதமன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் கலைச்செல்வன், தீபன் ராஜ், ஜீவா மாறன், அரசுமணி உள்ளிட்ட 10 பேர் மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர். இந்தநிலையில் நேற்று மாலை அவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கே 5 கடல் மைல் தொலைவில் மீனவர்கள் விசைப்படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்துள்ளனர். அப்போது அந்தப் பகுதிக்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் அதிர்ச்சி அடைந்த மீனவர்கள் தங்களின் உயிரை காப்பாற்றிக்கொள்ள விசைப்படகில் பல்வேறு இடங்களில் மறைந்து கொண்டனர். அப்போது மீனவர் கலைச்செல்வன் மீது ஒரு துப்பாக்கி குண்டு உரசிசென்றுள்ளது. இதில் அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதனால் மயங்கி விழுந்த கலைச்செல்வனை நாகை துறைமுகத்திற்கு மீனவர்கள் கொண்டு வந்தனர். அங்கிருந்து நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக நாகை பகுதி மீனவர்கள் மீது இலங்கை கடற்படையால் துப்பாக்கிச் சூடு சம்பவம் நடைபெறாமல் இருந்த நிலையில் தற்பொழுது மீண்டும் துப்பாக்கி சூடு நடந்திருப்பது மீனவர்கள் மத்தியில் பரபரப்பையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## பழையாறு 300 மீட்டர் தூரத்திற்கு புதிய படகு அணையும் தளம் அமைக்கப்படும்



மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே பழையாறு மீன்பிடி துறைமுகத்தை எம். பி. ராமலிங்கம்இ எம். எல். ஏக்கள் நிவேதா முருகன்இ பன்னீர்செல்வம் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதுகுறித்து ராமலிங்கம் எம். பி. நிருபர்களிடம் கூறியதாவது:—பழையாறு மீன்பிடி துறைமுகத்தில் படகு அணையும் இடத்தில் 12 அடிக்கு மணல் மேடாகி உள்ளது. இதனால் துறைமுகத்தில் படகு நிறுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அந்த இடத்தில் படகுகளை நிறுத்தும்போது படகுகள் காற்றில் ஒன்றோடொன்று மோதி உடைந்து சேதம் ஏற்படுகிறது. தற்போது துறைமுகத்தில் படகு நிறுத்தும் அளவிற்கு உரிய கட்டுமானம் இல்லை. எனவே துறைமுகத்தில் இருந்து பக்கிங்காம் கால்வாய் வரை 300 மீட்டர் தூரத்துக்கு புதிய படகு அணையும் தளம் அமைக்க வேண்டும் என்று மீனவர்கள் மற்றும் மீனவ தலைவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இதனை முதல்—அமைச்சரின் கவனத்திற்கு எடுத்து சென்று இந்த ஆண்டே 300 மீட்டர் தூரத்திற்கு புதிய படகு அணையும் தளம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே பி. எம். என். என். எஸ். என்ற திட்டத்தின் கீழ் ரூ.27.5 கோடி மதிப்பீட்டில் தூர்வாரும் பணிக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இது மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் மீன் உலர்தளம் அமைக்கவும் ஏற்கனவே டெண்டர் விடப்பட்டுள்ளது. கடந்த அதிமுக. ஆட்சியில் இதற்காக எந்த பணியும் மேற்கொள்ளப்படவில்லை வனத்துறை அதிகாரிகள் இதற்கு தடை விதித்துள்ளனர். இதனை வனத்துறை அதிகாரிகளிடம் எடுத்து பேசி உடனடியாக மீன் உலர்தளம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். கொள்ளிடம் ஒன்றியக்குழு தலைவர் ஜெயபிரகாஷ்இ துணைத் தலைவர் பானுசேகர்இ கொள்ளிடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மலர்விழி திருமாவளவன்இ சீர்காழி நகர செயலாளர் சுப்பராயன் மற்றும் பழையாறு மீனவ பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969